1992 மார்ச் 11]

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு தனிக் கேள்வி போடப்பட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 161. திரு. அ. தேவராஜ். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

161—

இலவச பாடநூல் வழங்கும் திட்டம்.

*457. திரு. அ. தேவராஜ்:

மாண்புமிகு கல்வி அமைச்சர்கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அரசின் இலவச பாடநூல் வழங்கும் திட்டத்தில் மாற்றம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, வினா எண். 162. திரு. க. அர்ச்சுனன். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

162—

விளையாட்டிற்கு தனித்துறை ஏற்படுத்துதல்.

*2435—திரு. க. அர்ச்சுனன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

விளையாட்டு மற்றும் 'ஜிம்நாஸ்டிக்ஸ்' (Gymnastics) துறைகளில் நாட்டம் உள்ளவர்களின் திறமையை வெளிப்படுத்தவும் உலகளவில் தமிழகத்தின் பெருமையை நிலைநாட்டவும் தனித்துறை அமைக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் விளையாட்டு மற்றும் இளைஞர் நலனுக்காக இளைஞர் விளையாட்டுப் பயிற்சித்துறை என்ற தனித்துறை ஏற்கனவே 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு தற்பொழுது செயல்பட்டு வருகிறது.